# ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழா

*திருவழிபாட்டு ஆண்டு* B (*11-01-2015*)

*திருப்பலி முன்னுரை*

இறைமக்கள் அனைவருக்கும் அன்பு வணக்கம். ஆண்டவர் இயேசுவின் பிறப்பு விழாவிற்குப்பின் வரும் காலத்தின் இறுதி நாளாக ஆண்டவரின் திருமுழுக்கு விழா அமைகிறது. இன்று திருமுழுக்கு விழாவைக் கொண்டாடும் உங்கள் அனைவருக்கும் திருமுழுக்குவிழா வாழ்த்துகள். இயேசுவின் திருமுழுக்கில் நாம் கண்டறியும் வெளிப்பாடுகள் முதன்மையான மறையுண்மைகளை உள்ளடகியவை. மனிதருடைய பாவங்களுக்காகத் தன்னையே ஈகம் செய்யவந்த இயேசு தான் பாவம் செய்யா நிலையில் இருந்தும் மக்களுடைய பாவங்களைத் தான் ஏற்றுப் பலியாக இருப்பதால் தன் அருட்பணியின் தொடக்கமாக யோவானிடம் திருமுழுக்குப்பெற வந்தார்.

நாம் திருமுழுக்கு வழியாக இறைவனின் பிள்ளைகள் என்னும் மாபெரும் உரிமையையும், உறவையும் பெற்றுள்ளோம். இதனால் திருமுழுக்குப் பெற்றுள்ள நாம் அனைவரும் இறைவனை நம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் மகிமைப்படுத்த அழைக்கப்படுகின்றோம். எனவே நமக்குள் குடிகொண்டிருக்கும் பகைமை, வெறுப்பு, போட்டி மனப்பான்மை முதலியவற்றை வேரறுத்து உண்மையான இறைமக்கள் சமூகமாக வாழ நம்மை அர்ப்பணித்து தொடரும் பலியில் பங்கேற்போம்.

www.tamilcatholicnews.com

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**ஆசீரும் அருளும் நிறைந்த அன்புத் தந்தையே இறைவா!**

உமது பிரதிநிதிகளாக இருக்கும் திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலைப் பணியாளர்கள் அனைவரும் மக்களுக்கு ஆறுதலாகவும் ஆசீர்வாதமாகவும்: உலகிற்கு உப்பாகவும் ஒளியாகவும் புளிக்காரமாகவும் இருந்து பணியாற்ற வேண்டிய பலத்தையும் உடல் நலத்தையும் அவர்களுக்கு அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அருள் வளங்களின் ஊற்றே இறைவா!**

உமது திருநாமத்தில் திருமுழுக்குப் பெற்றுள்ள நாங்கள் அனைவரும் எம்முடைய வாழ்வாலும், வார்த்தையாலும் உம்மை மகிமைப்படுத்தி: இறையுறவிலும், ஒழுக்கத்திலும், ஞானத்திலும், சமூக உறவிலும் சிறந்து விளங்கி உமக்குகந்த மக்களாக சாட்சிய வாழவும் அமைதியின் தூதுவர்களாகச், செயற்படவும் எம்மை ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அரசருக்கெல்லாம் அரசரே எம் இறைவா!**

நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும், துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும், இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும் , நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**ஆசியும், நல்வாழ்வும் தருகின்ற தந்தையே!**

பிரிவினைகளோடும், கசப்புணர்வுகளோடும், பழிவாங்கும் மனநிலையோடும், கண்ணீரோடும் வாழும் அனைத்து குடும்பங்கள்மீதும் மனமிரங்கி அவர்கள் உண்மையான மன மாற்றம் பெற்று, கணவன், மனைவி ஆகியோர் ஒப்புரவாகி திருக்குடும்பமாகிய அன்னை மரியா, தூய யோசேப்பு, இயேசு ஆகியோரைப் பின்பற்றி வாழ்வதற்கு வேண்டிய அருளை அளித்துக் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**திருக்காட்சி நிகழ்வின் வழியாக உம் அன்பை எல்லா மக்களக்கும் வெளிப்படுத்திய இறைவா!**

கீழ்த்திசை அரசர்களைப் போன்று, நாங்கள் எளிய மனத்தோடும், திறந்த உள்ளத்தோடும் வாழவும்: எவ்வளவு எதிர்ப்புக்கள், தடைகள் எம் வாழ்வில் வந்தாலும், தொடர்ந்து உம்மைத்தேடி, எம் வாழ்வில் உம்மைச் சொந்தமாக்கிக் கொள்ள அருளைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் என்றுரைத்த தந்தையே இறைவா!**

எமது இளைஞர்கள் அனைவர் மீதும் மனமிரங்கி நீர் உம் திருமகன் இயேசுவை அனைத்து நலன்களாலும் நிரப்பியது போல எம் இளைஞர்களையும் ஆவியின் வல்லமையால் நிரப்பி, ஆசீர்வதித்து வழிப்படுத்தியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அருள் வளங்களின் ஊற்றே இறைவா!**

இன்றைய நாட்களிலே குடும்பத்தின் புனிதத் தன்மைக்கும் , உறவுக்கும், ஒற்றுமைக்கும் எதிராக இருக்கும் எல்லாச் சக்திகளையும் முறியடித்து: குடும்பங்களிலே அன்பும், ஒற்றுமையும், தோழமையும், புரிந்துணர்வும் நிலைபெற்று: குடும்பங்கள் திருக்குடும்பத்தின் தன்மைகளைக் கொண்டு வாழ அருளாசீர் அளித்திடவேண்டுமென்றும்: பிரிந்திருக்கும் குடும்பங்களை ஒன்று சேர்த்திடவேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நோயாளரின் ஆரோக்கியமே இறைவா!**

நாங்கள் அனைவரும் எங்களின் வாழ்வில் கிறிஸ்துவை வெளிப்படுத்த தடையாக இருக்கும் கர்வம், ஆணவம், பொறாமை, போட்டி மனப்பான்மை போன்றவைகளை களைந்து கிறிஸ்துவுக்கு சான்று பகர்கிறவர்களாக திகழவும், எம் பங்கில் இருக்கின்ற நோயாளிகள், முதியவர்கள், கைவிடப்பட்டவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை செய்து அவர்களை உமது அன்பில் திளைக்கவைக்கவும், உலக நாடு முழுவதும் பரவிவரும் பல்வேறுபட்ட கொடிய நோய்கள் இல்லாதொழியவும், இயற்கையாகவும், மனிதராலும் உருவாக்கப்படும் எல்லா அழிவுகளும் இல்லாது போகவும்: மக்கள் அனைவரும் உம்முடைய குரலுக்கே செவிகொடுத்து, உம்மைப் பின்பற்றி வாழவும் அருள் கூர்ந்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.